தின்னக் கூடாத தின்பண்டங்கள்

ஒரு காலத்தில் மனிதர்கள் எதிரியை வீழ்த்த கத்தி, வாள், ஈட்டி, கோடாரி போன்றவைகளை பயன்படுத்தினார்கள். சற்று விஞ்ஞானம் வளர துப்பாக்கி, பீரங்கி அதன்பின் ராக்கெட் ஏவு கணைகள், அணுகுண்டுகள் போன்றவைகளை பயன்படுத்தினர். தற்காலத்தில், வைரஸ் கிருமிகள் போன்றவைகளை பயன்படுத்துகின்றனர். அதன் வரிசையில் இஸ்லாமியர்களுக்கு எதிராக மறைமுகமாக நடத்தப்படுவதுதான், உணவுப்போர்..

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு அவர்கள் உண்ணும் உணவில் எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. ஹராம் ஹலால் கிடையாது. ஆனால், முஸ்லிம்களுக்கு அனைத்து விஷயங்களிலும் கட்டுப்பாடு, வரையறை, ஹராம் ஹலால் பேணுதல் கட்டாயமாகிறது. உண்ணும் உணவில் பேணப்படும் ஹலால் ஹராமை வைத்துதான் இறைவழிபாடுகள், பிரார்த்தனைகள் இறைவனிடத்தில் ஏற்கப்படுவதும், மறுக்கப்படுவதும்.

இப்படிப்பட்ட இஸ்லாமியர்களின் வழிபாடுகளையும் பிரார்த்தனைகளையும் நாசமாக்குவதற்காக இஸ்லாமியர்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட மறைமுக சதியே உணவு போர் ஆகும்...இதில், இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டவைகளை மக்கள் அன்றாடம் உண்ணும், உபயோகிக்கும் பொருட்களில் அவர்கள் அறியாவண்ணம் கலந்து விடுவதே அடிப்படை நோக்கமாகும். இவற்றை அறிந்து ஆராய்ந்து தெளிவான ஹராமையும், சந்தேகத்திற்கிடமானவற்றையும் விட்டு நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது கட்டாயக் கடமையாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்...

"திட்டமாக, ஹலால் தெளிவாக அறியப்படும். இன்னும் ஹராம் தெளிவாக அறியப்படும். இவ்விரண்டிற்கும் மத்தியில் சந்தேகத்திற்குண்டானவைகள் இருக்கின்றன. மக்களில் அதிகமானோர் அவற்றை அறியாமல் இருக்கின்றனர். யார் அல்லாஹ்வுக்கு பயந்து சந்தேகத்திற்கிடமான வற்றை தவிர்ந்து கொண்டாரோ அவர் தன் மார்க்கத்தில் நிலையாகிவிட்டார். யார் சந்தேகத்திற்கிடமானவற்றை (தவிர்க்காமல்) உபயோகித்தாரோ அவர் ஹராமில் விழுந்து விட்டார். (புகாரி, முஸ்லிம்)

நாம் அன்றாடம் உண்ணும் பிஸ்கட்டுகள், மிட்டாய்கள், ஜெல்லி, சாக்லேட்கள், ஐஸ்கிரீம்கள் போன்ற தின்பண்டங்களில் ஹராம் கலக்கப்பட்ட சந்தேகத்திற்குண்டானவைகள் கலக்கப்பட்டுள்ளன. **பிளாஸ்டிக் கலர் காகிதங்களில் அடைக்கப்பட்ட கார்ப்பரேட் உணவுப் பண்டங்களில் மிக மிக அதிகமானவைகள் தவிர்க்கப்பட வேண்டியவையே.** குறிப்பாக சொன்னால் சில கம்பெனிகளில் அனைத்து Product களும் ஹராம் கலக்கப்பட்டவை, மற்றும் சந்தேகத்திற்கிடமானவை. நம்பகத் தன்மை அற்றவை.

அவைகளில் சில **BRITTANIA, PARLE, NESTLÉ, CADBURY, LOTTE, KINDER JOY, MILKYBAR, MUNCH, 5STAR, KITKAT, TIGER, MARIE, AMUL ICE CREAM, LOLLYPOP, LAYS, CHEWING GUM, OREO, CHOCO PIE, DARK FANTASY** என பட்டியல் நீளுகிறது.

பன்றியின் கொழுப்பை நேரடியாக pig fat என்று கலக்காமல் இமுல்சிஃபியர் (emulsifier) என்ற மாற்றுப் பெயரில் கலவையாக சேர்க்கின்றனர். மீத்தேன் வாயுவை ஹைட்ரோ கார்பன் என்பது போல. இதை எப்படி கண்டறிவது எனில், ஒவ்வொரு உணவுப் பொருள் பாக்கெட்டிலும் மிகச் சிறிய எழுத்தில் இன்கிரிடென்ட்ஸ் (ingredients) என்று அதில் சேர்க்கப்பட்ட பொருள்களை ஆங்கிலத்தில் போடப்பட்டிருக்கும். அவற்றில் சில பெயர் போடாமல் எண்களும் குறியீடுகளும் இருக்கும். அவற்றை வைத்து அந்த கலவை ஹலாலா? ஹராமா? சந்தேகப்படும்படியானதா? என ஆராயலாம். இன்னும் சுருங்கக் கூறின், Background சிவப்பு நிறத்திலும், எழுத்து வெள்ளை நிறத்திலும் உள்ள பொருட்கள் தவிர்க்கப்பட வேண்டியவை

E100, E110, E120, E140, E141, E153, E210, E213, E214, E216, E234, E252, E270, E280, E325, E326, E327, E334, E335, E336, E337, E422, E430, E431, E432, E433, E434, E435, E436, E440, E470, E471, E472, E473, E474, E475, E476, E477, E478, E481, E482, E483, E491, E492, E493, E494, E495, E542, E570, E572, E631, E635, E904.

மேற்கண்ட குறியீடு எண்களில் ஒன்று இருந்தாலும் அந்த உணவுப் பொருள் கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டியதே. மிகுதமாக இன்று தவிர்க்க முடியாததாகிவிட்ட GOOD DAY, PARLE G, TIGER, MARIE, RUSK போன்றவைகளில் E471, E472, E322 போன்ற குறியீடுகள் உள்ளன. இவை ஹராமான கலவைகளே என்பதை இணைய தளத்தில் மிக எளிதாக காணலாம். **நம்முடைய ஆண்ட்ராய்டு மொபைலில் கூகுளில் E471 என்று போட்டாலே போதும். அதன் Image ல் மேற்கண்ட அனைத்து விஷயங்களும் வந்துவிடுகிறது.**

சில பொருட்களில் E471 எனும் இமுல்சிஃபியர் தாவரங்களில் இருந்தும் காய்கறிகளில் இருந்தும் எடுப்பதாக போடப்படுகிறது. ஆனால், எந்த அளவுக்கு நம்ப முடியும். வெஜிடேரியன் குறியீடாக பச்சை நிற அடையாளம் போடப்படுகிறது. அதன் நம்பகத்தன்மை ஆன்லைனில் fssai எடுப்பவர்களுக்கு தெளிவாக புலப்படும். அதாவது, ஊர்ஜிதமாக நம்ப முடியாது

ஆக, மேற்கண்ட வகைகளில் ஹராம் தெளிவாக கலந்துள்ளது என சொல்ல முடியாவிட்டாலும் கலக்கப்படவில்லை என உறுதியாக சொல்லவும் முடியாது. ஏனெனில், இவைகள் எல்லாம் சந்தேகத்திற்கிடமானவைகள். மட்டுமல்லாமல், ஏதாவதொரு விதத்தில் உடல் நலனை பாதிக்கக்கூடிய கெமிக்கல்களின் கலவைகள். எனவே, இவைகளை எல்லாம் நபிகளாரின் அருள்மொழிக்கு கட்டுப்பட்டு தவிர்ந்து கொள்ள வேண்டியது நம்மீது கட்டாய கடமையாகும். அப்போதுதான் நம்முடைய துஆக்களும் , நல் அமல்களும், இறைவனிடத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இதுபோன்ற சந்தேகத்திற்கிடமான கார்ப்பரேட் பொருட்களை தவிர்த்து உள்ளூர் சந்தைகளில் தயாரிக்கப்படும் நம்பகமான உணவு பண்டங்களுக்கு ஆதரவளித்து பலப்படுத்துவோம். நம் முன்னோர்கள் நமக்கு காட்டித்தந்த சத்தான உணவுப் பண்டங்களான **கடலை மிட்டாய், கடலை உருண்டை, எள் உருண்டை, பொரி உருண்டை, பொட்டுக் கடலை உருண்டை, கம்மர்கட், இஞ்சிமரப்பா, தேங்காய் பர்பி, பால்கோவா, சீம்பால் கட்டி, கல்கோனா, வேர்க்கடலை** மற்றும் நமது உள்ளூர் பேக்கரிகளில் தயாரிக்கப்படும் **மைதா கலக்காத பிரட், பண், பிஸ்கட் வகைகள்** போன்றவைகளை மட்டுமே தின்பண்டங்களாக உட்கொள்வோம். கெமிக்கல் கலக்காத இயற்கை உணவுகளுக்கு முக்கியத்துவம் தந்தால் நமது உடல் நலம் மேம்படுவது மட்டுமின்றி உள்ளூர் வணிகமும் பொருளாதாரமும் மேம்படும்.

எனவே இஸ்லாமியர்களுக்கு எதிராக பின்னப்படும் பன்முக சதிவலையில் சிக்கி விடாமல் காக்க வல்ல அல்லாஹ்விடம் நாம் கேட்கும் துஆ அங்கீகரிக்கப்பட, நமது நல் அமல்கள் ஒப்புக்கொள்ளப்பட, நாம் உண்ணும் உணவை ஹலாலானதாக மட்டுமே ஆக்கிக்கொள்ள வேண்டும்....

வல்ல அல்லாஹ் உதவி புரிவானாக !!! ஆமீன்....

ஹாபிழ், காரி, மௌலவி O.K.S பாகவி, இமாம், ஜாமிஆ மஸ்ஜித், வாழப்பாடி, சேலம் மாவட்டம். 8608408601